THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 30th March 1966

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Intensive Agricultural Programme

*10 *Q*.—SRI K. R. SAMBANDAM: Will the Hon. the Minister for Home be pleased to state the number of villages brought under the Intensive Agricultural District Programme in Thanjavur district?

கனம் திரு. பூ. கக்கன்: 1965-66 முடிய, 1750 கிராமங்கள் தஞ்சை மாவட்டத் தீவிரச் சாகுபடித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

திரு. கி. இரா. சம்பந்தம்: இந்த அக்ரிகல்சுரல் ஸ்கிமுக்கும் பாக்கேஜ் ஸ்கிமுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: பாக்கேஜ் ஸ்கீமிலே கூடுதலான வசதிகள் கொடுக்கப்படுகின்றன. குறிப்பாக

Technical guidance is provided to all farmers at all stages of farming in respect of agronomy, farm management, plant protection, agricultural engineering and quality seed production.

இதைத்தவிர இதரக் கடன் வசதிகள் குறிப்பாக கூட்டுறவு சொசைடி மூலமாக கடன் வசதிகள் இன்னும் சில வசதிகள் கொடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கி. இரா. சம்பந்தம்: அமெரிக்காவிலிருந்து நிதி கொடுக்கப்படுகிறதே அது அக்ரிகல்சுரல் ஸ்கீமுக்குப் பயன் படுத்தப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில் பாக்கேஜ் ஸ்கீமுக்காகத்தான் ஃபோர்டு பவுண்டேஷனால் கொடுக்கப்படுகிறது. இந்த உதவிகள் விவசாயிகளுக்குக் கிடைக்கின்றன.

[30th March 1966

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : பாக்கி கிராமங்கள் எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும்? இந்தத் திட்டத்தின் கீழ் அரசாங்கம் என்னென்ன உதவிகள் செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே சொன்னேன் சில உதவிகள் பற்றி. அதாவது, பணவசதி, விதைகள் கொடுப்பது, உரம் கொடுப்பது பெஸ்டிசைட்—பூச்சிக்கொல்லி மருந்து—கொடுப்பது போன்றவைகள் பற்றி. இன்னும், கூட்டுறவு மூலமாக உதவிகள் செய்வது ஃபார்ம் பிளான் தயார் செய்வதற்கு அதைப் பார்த்து என்னென்ன உதவிகள் செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு வசதிகள் செய்யப்படுகின்றன. இதர கிராமங்கள் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்ற விவரம் என்னிடம் இல்லை. ஜில்லா பூராவிற்கும் விரைவாகக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இந்தத் திட்டத்தின் கீழ் ஏ.டி.டி. 27 விதையானது நல்ல அபிவிருத்தி அடைந்திருக்கிறது. ஆனால், கோவாப்ரேடிவ் சொசைடி மூலம் விவசாயிகளுக்கு பணம் கொடுப்பதில், கோவாப்ரேடிவ் சொசைடி சரியாக இயங்காத காரணத்தினால் இந்தத் திட்டத்திற்குப் பணம் கிடைப்பதில்லை. இதனால் இந்தத் திட்டத்தின் பயனைப் பெறமுடியவில்லை. ஆகையால் இந்த நல்ல திட்டத்தை அரசாங்கமே எடுத்துக்கொண்டு கடன் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : வசதிகள் செய்வது கூட்டுறவு மூலமாகச் செய்வதுதான் நல்லது என்று அரசாங்கம் எண்ணிச் செய்து வருகிறது. கூட்டுறவு முறையில் கொடுத்த உதவியைப் பார்த்தால் நன்மையும் இருக்கிறது. ஒரு சில இடங்களில் நன்மைகள் இல்லாமல் இருந்தால் அதைத் திருத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : கூட்டுறவு வாயிலாக இப்போது உதவிகள் கொடுத்துவருகிறார்கள். ஆயிரக்கணக்கான ஃபார்ம் பிளான் திட்டங்கள் கோவாப்ரேடிவ் சென்ட்ரல் பாங்க் அனுப்புகிறார்கள். ஆயிரக்கணக்கான திட்டங்களுக்கு அவர்கள் கொடுக்கமுடிவதில்லை. அது அரசாங்கப் புள்ளிவிவரத்தைப் பார்த்தால் தெரியும். ஒரு பிளாக்கில் 25 வீதம் எடுத்து ஒரு ஏக்கருக்கு 200 கொடுத்து தீவிரமாக அபிவிருத்தி செய்வதாகத் திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுமாதிரி இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறவேண்டுமென்றால் பணத்தை அரசாங்கமே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : உதாரணமாகத் தஞ்சையை எடுத்துக் கொண்டால் தஞ்சையில் கூட்டுறவு சொசைடி இருக்கிறது. கும்பகோணத்திலும் கூட்டுறவு சொசைடி இருக்கிறது. இந்த

இரண்டைப் பார்க்கும்போது தஞ்சாவூரில் உள்ள சொசைடி நன்றாக வேலை செய்கிறது. அதைப்பற்றி ஒன்றும் இல்லை. அது மாதிரி இங்கேயும் செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : விவசாயிகளுக்கு உரம் கூட்டுறவு சொசைடி மூலமாக கொடுக்கப்படுகிறது. இந்த வருஷம் இம்மாதிரி கிடைப்பது அரிதாக இருக்கும். ஆகையால் இதை விவசாய இலாக்கா மூலமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கூட்டுறவு சொசைடி மூலமாகப் பணமோ உரமோ பாக்கேஜ் ஸ்கீமில் கொடுக்கப்பட்டு வருகின்றன. சொசைடி மூலமாகக் கொடுப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த ஏ.டி.டி. 27 விதை வேறு மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட்டதா ? அது நிறைய உற்பத்தியைப் பெருக்குகிறது என்று சொல்லப்படுகிறதே, அதை மற்ற மாவட்டங்களுக்குக் கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : படிப்படியாக எல்லா மாவட்டங்களுக்கும், அதுவும் டெல்டா பகுதிகளுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரும். ஓரளவு பரீட்சார்த்தமாக முயற்சி செய்து வெற்றி கண்டிருக்கிறோம். இதர மாவட்டங்களுக்கும் படிப்படியாகக் கொண்டு வரலாம்.

வெண்ணெய் தயாரிப்பு

* 502 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேர்க்கடலையிலிருந்து வெண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க திட்டம் பரிசீலிக்கப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ? எங்கெங்கு ?

THE HON. SRI. R. VENKATARAMAN : (*a*) No.

(*b*) Does not arise.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலிருந்து மணிலா பயிர், மணிலா எண்ணை, மணிலா புண்ணாக்கு இவைகளெல்லாம் வெளிநாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதை விட்டு விட்டு நம்முடைய மணிலா பயிரிலேயிருந்து ஈடபல் கேக்ஸ் உற்பத்திச் செய்வதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்யத்தில் இருந்து ஏராளமாக மணிலாப் பயிர் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று என்னிடத்தில் தகவல் இல்லை. நம்முடைய நாட்டிலே வனஸ்பதி பாக்டரிகள் வந்துவிட்டன. இந்நாட்டு தேவை போக எவ்வளவு தூரம் அன்னிய செலாவணி சம்பாதிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோமோ அந்த அளவிற்குத்தான் ஏற்றுமதி செய்யப்படும்.